முருகப்பெருமான் துணை

**மகான் மானக்கஞ்சாற நாயனார் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.01.2022, சனிக்கிழமை

1. தவமே தன்னலம் கருதா
   தயவாக வந்த சிவமே
   சிவமே சற்குரு நாதனே
   செப்பிடுவேன் ஞானி உன்பெருமை
2. பெருமை கூறி துல்லிய ஆசி
   பிலவ ஆண்டு சிலை திங்களில்
   அறுநான்கு திகதி காரி வாரம்
   (பிலவ வருடம் மார்கழி மாதம் 24ம் நாள், 08.01.2022 சனிக்கிழமை)
   அருளுவேன் மானக்கஞ்சாற நாயனார் யானும்
3. யானும் உலகநலம்பெற உரைப்பேன்
   உயர்வான தரும வழிதனை
   ஞானமாகக் காட்டும் அரங்கன்
   ஞான உபதேசமே உலக மக்களை
4. மக்களை தேற்றி மீட்கும்
   மாதவ பலத்தை கொடுக்கும்
   ஆக்கமுடன் சரவணபவ எனும்
   ஆறுமுகனார் சடாட்சர செபம்
5. செபதபம் தொடர்ந்து ஒலிக்க
   செப்பிடுவேன் அரங்கன் குரல்
   அபயமென வந்து காக்கும்
   அவுசதம் அமுதாக வந்து நிற்கும்
6. நிற்கவே பிரணவக் குடிலை
   நீதி சபையாக மக்களேற்று
   அற்புதம் நடத்து என வேண்டி
   அரங்கன் திருவடி பற்றிவிட
7. பற்றிவிட மெய்ஞானம் பெருகும்
   பரிபக்குவம் தெளிவும் கூடி
   ஆற்றல்பட ஞானவான்களாகி
   அரங்கன் வழி மாற்றம் காண்பர்
8. காண்கவே ஞானவான்கள் தலைமை
   கட்டாயம் உலகினில் வர
   மேன்மை பொருந்திய அரங்கன்
   மேலான விசுவாசம் கொண்டு
9. கொண்டுமே மக்கள் வந்து
   குருபரனாக அரங்கன் தரும்
   தொண்டிலே இணைந்து கலந்து
   தொடர் சேவை ஆற்றி வர

10. வருகவே உலக மாற்றம்
வந்தடையும் ஞானமாற்றமாக
முருகப் பெருமான் ஆளுமையாக
முழுமைமிக்க தலைமையாக

11. ஆகவே உலகம் ஞான ஆட்சி
அரங்கனால் காணக் கூடும்
வகைபட ஞானிகளை வணங்கிட
வருமுலகில் எல்லா மாற்றமும் காண்பர்
துல்லிய ஆசி முற்றே

–சுபம்–